# 1. ஒழுக்கம்

1. அல்லும் பகலும் நல்ல
ஆர்வத் தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

2. பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
உலகத் தோடும் ஒத்தே
ஒழுகிக் கொள்ள வேண்டும்

3. இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

4. கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்.

5. பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்.

*வித்துவான் க. வேந்தனார்*

## பயிற்சிகள்

01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கல்வியை நாம் எவ்வாறு கற்க வேண்டும்?
2. இவ்வுலகிலே பெரியதாக விளங்கும் தருமம் எது?
3. ஒருவர் செய்த நன்றியை நாம் மறத்தல் கூடாது என்பதைக் குறிக்கும் பாடல் அடிகள் எவை?
4. ஐந்தாவது பாடலில் முதல் இரண்டு அடிகளும் உணர்த்தும் பழமொழியைத் தருக.
5. "உலகத்தோடு ஒத்து ஒழுகல்" என்றால் என்ன?

02. தரப்பட்டுள்ள சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புக.

| ஆர்வம், பட்டம், ஒழுக்கம், பருவம், நன்றி |
|---|

1. நாம் சிறந்த ................ உள்ளவராக வாழ வேண்டும்.
2. நாம் பலவும் படித்து.... பெறுவோம்.
3. எமக்கு.................செய்தவரை நாம் மறத்தல் கூடாது.
4. நாம் ................ பார்த்துப் பயிர்செய்தல் வேண்டும்.
5. நாம் கல்வியில் ........... காட்டல் வேண்டும்.

03. செயற்பாடு

இப்பாடலைக் குழுவாகவும் தனியாகவும் பாடுக.